தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

## திருச்சி வந்தடைந்தது காவிரி நீர்



**திருச்சி முக்கொம்பிலிருந்து புதன்கிழமை காலை திறக்கப்பட்டு, இரு கரைகளையும் தொட்டுச் செல்லும் காவிரி நீர்.**

சம்பா சாகுபடிக்காக மேட்டூர் அணையிலிருந்து திறக்கப்பட்ட காவிரித் தண்ணீர் புதன்கிழமை மாலை திருச்சிக்கு வந்தடைந்தது.கர்நாடக மாநிலத்தின், காவிரி நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் தொடர்ந்து பெய்த தொடர் மழையின் காரணமாக, அந்த மாநிலத்திலுள்ள அணைகள் நிரம்பின. இதைத் தொடர்ந்து, மேட்டூர் அணைக்கு திறக்கப்பட்ட தண்ணீரின் அளவு அதிகரித்து, நீர்மட்டம் உயர்ந்தது. அணையின் நீர்மட்டம் 109 அடியாக இருந்தபோது, கடந்த 10-ஆம் தேதி மாலை பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்பட்டது. ஜேடர்பாளையம், வேலாயுதம் பாளையம், வாங்கல், கரூர் வழியாக செவ்வாய்க்கிழமை மாயனூரை வந்த காவிரித் தண்ணீர், புதன்கிழமை காலை 6.40 மணிக்கு திருச்சி மாவட்டம், முக்கொம்புக்கு வந்தடைந்தது. இதையடுத்து, முக்கொம்பிலிருந்து 6000 கன அடி தண்ணீரை பொதுப்பணித் துறை அதிகாரிகள் திறந்துவிட்டனர். இந்தத் தண்ணீர் புதன்கிழமை மாலை திருச்சி கம்பரசம்பேட்டையைக் கடந்தது. தொடர்ந்து வியாழக்கிழமை அதிகாலை கல்லணையை காவிரித் தண்ணீர் கடக்கிறது. காவிரி டெல்டா பகுதிகளின் பாசனத்துக்காக கல்லணையிலிருந்து வியாழக்கிழமை

திறந்துவிடப்படும் தண்ணீர், ஓரிரு நாள்களில் கடைமடைப் பகுதிகளைச் சென்றடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. சாகுபடி செய்வதற்கான அனைத்துவித நடவடிக்கைகளையம் விவசாயிகள் மேற்கொண்டு வருவதாக வேளாண் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

**<u>அவரைக்காய், பீன்ஸ் விலை குறைவு: தக்காளி அதே விலையில் நீடிப்பு</u>**

சென்னை கோயம்பேடு சந்தையில் அவரைக்காய், பீன்ஸ், நூக்கல் விலை குறைந்துள்ளது. ஆனால், தக்காளியின் விலை குறையாமல் அதே நிலையிலேயே நீடிக்கிறது. கடந்த சில வாரங்களாக ஒரு கிலோ அவரைக்காய் ரூ.50-க்கும், பீன்ஸ் ரூ.70-க்கும், நூக்கல் ரூ.25-க்கும் விற்பனையாகின. தற்போது, இவை முறையே ரூ.25-க்கும், ரூ.40-க்கும், ரூ.15-க்கும் விற்பனை செய்யப்படுகின்றன. எனினும் தக்காளி ரூ.50 என்ற நிலையிலேயே விற்கப்படுகிறது. இது குறித்து கோயம்பேடு காய்கறி வியாபாரிகள் சங்க ஆலோசகர் செப்ந்தர்ராஜன், சங்கத் தலைவர் சந்திரன் ஆகியோர்கூறியது: அவரைக்காய், கர்நாடக மாநிலத்திலுள்ள சீனிவாசபுரம், மானூர், கோலார், ஒஸ்கோட்டா, தமிழகத்திலுள்ள தேனி, திண்டுக்கல், நிலக்கோட்டை, பாச்சலூர், மைக்கேல் பாளையம், கொசவப்பட்டி ஆகிய இடங்களிலிருந்து சென்னை கோயம்பேடு மார்க்கெட்டுக்கு விற்பனைக்கு வருகிறது. பீன்ஸ், ஆந்திர மாநிலத்திலுள்ள குப்பம், விகோட்டா, கர்நாடக மாநிலத்தின் ஒஸ்கோட்டா, விஜயபுரா, மானூர், கோலார், தமிழகத்தில் கொடைக்கானல், ஊட்டி ஆகிய பகுதிகளில் இருந்தும் விற்பனைக்கு வருகிறது. நூக்கல் தமிழகத்தில் சின்னமனூர், கொடைக்கானல், ஊட்டி, கர்நாடகம்- தமிழக எல்லைப் பகுதிகளில் இருந்தும் விற்பனைக்காக சென்னைக்கு கொண்டு வரப்படுகிறது. இந்தப் பகுதிகளில் பெய்து வரும் மழையின் காரணமாக விளைச்சல் அதிகரித்து, அங்கிருந்து வரும் காய்கறிகளின் வரத்தும் கணிசமாக உயர்ந்துள்ளது. எனவே, விலை குறைந்துள்ளது. இந்த விலை வரும் அக்டோபர்- நவம்பர் மாதங்களில் இன்னும் குறைய வாய்ப்புள்ளது. எனினும், ஆந்திரம், கர்நாடகத்திலிருந்து வரும் தக்காளி யின் வரத்து குறைவாகவே உள்ளது. தமிழகத்திலிருந்து வரும் தக்காளியின் அளவும் மிகக் குறைவே. இதனால், தக்காளியின் விலை அதே நிலையிலேயே நீடிக்கிறது. உருளைக்கிழங்கின் விலையும் அதிகரித்துக் காணப்படுகிறது என்றனர்.

**சென்னை கோயம்பேடு சந்தையில் புதன்கிழமை விற்பனை செய்யப்பட்ட காய்கறிகளின் விலை நிலவரம் கிலோவில் (அடைப்புக்குறிக்குள் பழைய விலை):**

நாட்டுத் தக்காளி 40 முதல் 50 வரை (50)

பெங்களூர் தக்காளி 50 (60)

வெங்காயம் 28 (30)

சின்ன வெங்காயம் 45 (30)

முட்டைகோஸ் 10 (18)

கேரட் 45 (45)

இஞ்சி (புதியது) 50 (70)

இஞ்சி (பழையது) 100 (120)

கொத்துமல்லி (ஒரு கட்டு) 10 (40)

உருளைக்கிழங்கு 32 (20)

பச்சை மிளகாய் 20 (30)

முருங்கைக்காய் 30 (50)

பீட்ரூட் 30 (35)

செப்செப் 20 (25)

சேப்பங்கிழங்கு 25 (35)

சேனைக்கிழங்கு 20 (25)

பாகற்காய் 30 (30)

வெண்டைக்காய் 20 (25)

கத்திரிக்காய் 15 (20)

பச்சை பட்டாணி 100 (100)

கோவைக்காய் 15 (20).

நாட்டு அவரை 20 (40)

பெல்ட் அவரை 25 (55)

பட்டை அவரை 25 (50)

கோலி அவரை 40 (60)

சாதாரண பீன்ஸ் 40 (50)

செடி பீன்ஸ் 30 (40)

கொடி பீன்ஸ் 40 (70)

நூக்கல் 15 முதல் 20 வரை (25).

**மேட்டூர் அணை நீர்மட்டம் 111 அடியாக உயர்வு**

மேட்டூர் அணையில் நீர்மட்டம் இன்று காலை 111 அடியாக உயர்ந்தது. இன்று காலை 8 மணி நிலவரப்படி அணையில் நீர்மட்டம் 111.52 அடியாக இருந்தது. அணையில் நீர் இருப்பு 80.58 டி.எம்.சி. ஆகவும், அணைக்கு நீர் வரத்து விநாடிக்கு 11,119 கன அடியாகவும், நீர் திறப்பு விநாடிக்கு 12,000 கன அடியாகவும் இருந்தது.

**ஆக.22-இல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டம் இம்மாதம் 22 ஆம் தேதி காலை 11 மணியளவில் நடைபெறும் என ஆட்சியர் அலுவலகம் புதன்கிழமை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. செய்திக்குறிப்பு: ராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் க.நந்தகுமார் தலைமையில், ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள ஊராட்சி மன்றக் கூட்ட அரங்கில் இம்மாதம் 22 ஆம் தேதி விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டம் நடைபெறும். விவசாயிகளும், விவசாயிகள் சங்கப் பிரதிநிதிகளும் தவறாது கலந்து கொண்டு விவசாயம் சார்ந்த கருத்துக்கள் குறித்து மட்டுமே விவாதிக்க கேட்டுக் கொள்ளப்படுவதாகவும் அச்செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. "உயிரி ஆற்றல், சூரிய சக்தி, காற்று சக்திக்கு முக்கியத்துவம் தர வேண்டும்' உயிரி ஆற்றல், சூரிய சக்தி, காற்று சக்திக்கு முக்கியத்துவம் தர வேண்டும் என, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக துணைவேந்தர் கு.ராமசாமி தெரிவித்தார். தமிழ்நாடு வேளாண்மைப் பல்லைக்கழக சுற்றுச்சூழல் மற்றும் பொறியியல் துறை மாணவர்களால் "சுற்றுச்சூழல் திருவிழா'என்ற இருநாள் தேசிய கருத்தரங்கு புதன்கிழமை தொடங்கியது. இதில்,

வேளாண்மைப் பல்கலைக்கழக துணைவேந்தர் கு.ராமசாமி பேசியது: இந்தியாவில் 12 மணி நேரம் சூரிய ஒளி கிடைக்கிறது. எனவே, வற்றாத வளங்களிலிருந்து ஆற்றல் எடுப்பதில் தமிழகம் முதன்மையாக திகழ வாய்ப்பிருக்கிறது. தொழிற்சாலைக் கழிவு வெளியேற்றத்தில் பூஜ்ய நிலைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும். பிகார் மாநிலத்தில் பாசனமும், ஆற்றல் பயன்பாடும் இணைக்கப்பட்டுள்ளது. உப்பு நீரை நல்ல நீர் ஆக்குவதன் மூலம் துபையில் தண்ணீர் தேவை தன்னிறைவு அடைந்துள்ளது. எதிர்காலத்தில் பிரச்னை ஏற்படும் போது சிந்திப்பதைவிட இப்போதே உயிர் ஆற்றல், சூரிய சக்தி, காற்று சக்தி ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். தமிழகத்தில் தான் மூன்று மாவட்டங்கள் உயிர் எரிவாயு சக்தி பயன்பாட்டுக்கு பரிசு பெற்றன. புதுமைக் கண்டுபிடிப்புகளுக்கு தேசிய உணர்வுடன் கூடிய ஆராய்ச்சிகள் தேவை. தமிழக அரசு புதுமை கண்டுபிடிப்புகள் மற்றும் நீண்டகால நீடித்த ஆராய்ச்சி களுக்கு ரூ. 70 கோடி நிதி ஒதுக்கியுள்ளது. மாணவர்கள் தான் பல்கலைக்கழகத்தின் தூதுவர்கள் என்பதால் அவர்களை புதுமைக் கண்டுபிடிப்புகள் தர ஏதுவாக நல்ல கல்வியும், படைப்பாற்றல் மிக்கவர்களாக உருவாக்க வேண்டும் என்றார். சென்னை ஓரியன்ட் கிரீன்பவர் நிறுவனத்தின் துணைத் தலைவர் ஆர்.குலோத்துங்கன் பேசுகையில், "இந்தியா 70 சதவிகிதம் எரிபொருளுக்கு பிற நாடுகளை சார்ந்திருக்கிறது. உயிர் எரிவாயுதான் வருங்காலத்தில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கும்' என்றார். இந்தக் கருத்தரங்கில் பொறியியல் கல்லூரி முதன்மையர் திவாகர் துரைராஜ், பேராசிரியர்கள் மற்றும் மாணவ மாணவிகள் பங்கேற்றனர்.

## <u>பருத்தி சாகுபடிசாலை நடவு முறையில் கூடுதல் மகசூல்</u>

பருத்தி சாகுபடியில் சாலை நடவு முறையில் கூடுதல் மகசூல் பெறலாம் என்றார் ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மைய திட்ட ஒருங்கிணைப்பாளர் (பொ) ப. விஜயலட்சுமி.

இதுகுறித்து அவர் புதன்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

பெரம்பலூர் மாவட்டத்தில் அதிகளவில் மானாவாரியாக பருத்தி சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. தற்போது மாவட்டத்தின் பல பகுதிகளில் மழை பெய்து வருகிறது. இந்த மழையை பயன்படுத்தி விவசாயிகள் பருத்தி நடவை தொடங்க ஆயத்தமாகி வருகின்றனர். இந்த நிலையில், கடந்த 2 ஆண்டுகளாக பெரம்பலூர் மாவட்டத்தின் பல பகுதிகளில் நடத்திய ஆய்வுகளின் மூலம் பருத்தி விதைகளை வரிசைக்கு வரிசை 120 செ.மீ (4 அடி) இடைவெளியும், செடிக்கு செடி 45 செ.மீ.

(1.5 அடி) இடைவெளி விட்டு சாலை நடவு முறையில் நடவு செய்யும்போது, சராசரியாக ஓர் ஏக்கருக்கு 14 முதல் 18 குவிண்டால் வரை மகசூல் கிடைப்பதாக கண்டறியப்பட்டுள்ளது. இதற்கு முக்கிய காரணம், செடிகளின் எண்ணிக்கை 2.5 ஏக்கர் பரப்பளவில் 18,518 என்ற அளவில் அதிகரிப்பதே காரணம். ஆனால், விவசாயிகள் பயிரிடும் 120 செ.மீக்கு 90 செ.மீட்டர் இடைவெளியில் 2.5 ஏக்கர் பரப்பளவில் 9,259 செடிகள் மட்டுமே அமைத்து ஓர் ஏக்கருக்கு 7 முதல் 10 குவிண்டால் வரையே மகசூல் பெறுகின்றனர். இடுபொருள்களின் விலையேற்றம், வேலையாள்களின் அதிக செலவினம், மாறிவரும் தட்பவெப்ப நிலை ஆகியவற்றை கருத்தில் கொண்டு, இந்த பருவத்தில் 120 செ.மீட்டருக்கு 45 செ.மீட்டர் இடைவெளியில் பருத்தியை சாலை நடவு முறையில் நடவு செய்தால் கூடுதல் மகசூல் பெறலாம். மேலும் விவரங்களுக்கு, ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மையத்தை நேரில் தொடர்பு கொண்டு பயன்பெறலாம்.

## <u>உச்சத்தில் ஆப்பிள் விலை கிலோ ரூ.200க்கு விற்பனை</u>




சேலம்: காஷ்மீர், இமாசலம் மாநில உள்ளிட்ட பகுதிகளில் ஆப்பிள் சாகுபடி செய்யப்படுகிறது. தற்போது இப்பகுதிகளில் ஆப்பிள் சீசன் இல்லாததால், சேலம் மார்க்கெட்டுக்கு குறைந்தளவே ஆப்பிள் வந்து கொண்டிருக்கிறது. இதனால் கடந்த இரண்டு மாதமாக ஆப்பிள் விலை இறங்காமல், அதே நிலையில் நீடித்து இருக்கிறது. சேலம் கடைவீதி பழ வியாபாரிகள் கூறுகையில், 'தற்போது காஷ்மீர்,

இமாசல மாநிலம், டெல்லியில் ஆப்பிள் சீசன் இல்லாததால், வரத்து பாதியாக குறைந்துள்ளது. எங்களுக்கு ஒரு டன் மட்டுமே ஆப்பிள் வருகிறது. இங்கிருந்து நாமக்கல், தர்மபுரி, ஈரோடு, மேட்டூர், ஆத்தூர் உள்ளிட்ட பகுதிகளுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. ஆப்பிள் வரத்து குறைந்துள்ளதால், அதன் விலை அதிகரித்துள்ளது. ஒரு கிலோ ஆப்பிள் ரூ.180 முதல் ரூ.200 என விற்பனை செய்கிறோம். அடுத்த மாதத்தில் ஆப்பிள் சீசன் தொடங்க இருக்கிறது. அப்போது தற்போது இருக்கும் விலை குறையும்' என்றனர்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**கல்லணையை அடைந்தது காவிரிநீர்**

திருச்சி : சம்பா சாகுபடிக்காக மேட்டூர் அணையில் இருந்து திறந்து விடப்பட்ட காவிரி நீர் இன்று காலை கல்லணையை வந்தடைந்தது. சம்பா சாகுபடிக்காக பிற்பகலில் கல்லணையில் இருந்து தண்ணீர் திறந்து விடப்பட உள்ளது.

**கல்லணையில் இன்று தண்ணீர் திறப்பு**

திருச்சி: தஞ்சை மாவட்டம், கல்லணையில் இருந்து, டெல்டா பாசனத்துக்கு இன்று தண்ணீர் திறக்கப்படுகிறது. மேட்டூர் அணையில் இருந்து, ஆடிப்பெருக்கு விழாவுக்காகவும், டெல்டா பாசனத்துக்காகவும் திறக்கப்பட்ட தண்ணீர், தஞ்சை மாவட்டத்தில் உள்ள கல்லணைக்கு வந்து சேர்ந்துள்ளது. இங்கிருந்து, டெல்டா மாவட்டங்களுக்கு, பாசனத்துக்காக, இன்று திறந்து விடப்பட உள்ளது. இதில், தமிழக அமைச்சர்கள் மற்றும் பொதுப்பணித்துறை அதிகாரிகள் பங்கேற்கின்றனர்

**கூடலூரில் விவசாய ஆராய்ச்சி மையத்தை அமைத்தால் பயன்**

கூடலூர் : "அனைத்து விதமான காய்கறிகளும் விளையும், கூடலூர் பகுதியில் "விவசாயி ஆராய்ச்சி மையம்' அமைக்க வேண்டும்' என, வலியுறுத்தப்பட்டுள்ளது.

கூடலூர் பகுதி விவசாயிகள் தேயிலை, காபி, குருமிளகு, ஏலம், கிராம்பு, பாக்கு, போன்ற நீண்ட கால பயன் தரும் பயிர்கள் விளைகிறது. மேலும், குறுகிய காலத்தில் பயன் தரும் நெல், பாகற்காய், பீன்ஸ், கோஸ், முள்ளங்கி, பஜ்ஜி மிளகாய், இஞ்சி, வாழை, கரும்பு உள்ளிட்ட பல விதமான விவசாய பயிர்களையும் பயிரிட்டு பயனடைந்து வருகின்றனர். இதற்கு இங்குள்ள மண்ணின் தன்மையே முக்கிய காரணமாகும். இதனை கருத்தில் கொண்டு, புளியாம்பாறை பகுதியில், கோவை வேளாண்மை பல்கலைக் கழகம் சார்பில், வீரிய ஒட்டுநெல் ஆராய்ச்சி மையம் துவங்கப்பட்டுள்ளது. தனியார் மூலமும் நெல் ஆராய்ச்சி செய்து வருகின்றனர். விவசாயிகள் கூறுகையில், "கூடலூர் பகுதி மண்ணின் தன்மையை கருத்தில் கொண்டு, விவசாய பயிர்களையும் ஆராய்ச்சி செய்து, அதில் புதிய கண்டு பிடிப்புகளை உருவாக்கும் வகையிலான "விவசாய ஆராய்ச்சி மையம்' துவக்க அரசு நடவடிக்கை எடுத்தால், பயன் ஏற்படும்' என்றனர்.

## சிம்லா ஆப்பிள் சீஸன் துவக்கம் விலை குறைவால் மகிழ்ச்சி

ஈரோடு: சிம்லா ஆப்பிள் சீஸன் துவங்கியுள்ளது. குறைந்த விலையில் விற்கப்படுவதால் மக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். ஆப்பிள் சீஸன் முடிவுக்கு வந்ததால், கடந்த, நான்கு மாதங்களுக்கும் மேலாக, ஆப்பிள், பல நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டது. சீஸன் இன்மையால், குறைந்த அளவிலான ஆப்பிளே, வட மாநிலங்களில் இருந்து, தமிழகத்துக்கு வந்தது. இதனால், விலை அதிகரித்து இருந்தது. அதிக விலை காரணமாக, பொதுமக்கள் வாங்க தயக்கம் காட்டினர். இந்நிலையில், தற்போது சிம்லா ஆப்பிள் வரத்து துவங்கியுள்ளது. இதுகுறித்து, ஈரோடு நேதாஜி மார்க்கெட் பழ வியாபாரி கவுதம் கூறியதாவது:

சிம்லா ஆப்பிள் சீஸன் துவங்கி, ஐந்து நாட்கள் ஆகிறது. டிசம்பர் மாத இறுதி வரை, வரத்து இருக்கும். 25 கிலோ அட்டை பெட்டியில் ஆப்பிள் வருகிறது.

சிறிதாக, சிவப்பு கலரில் இருக்கும். கிலோ, 150 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. பல்வேறு விலைகளிலும், சிம்லா ஆப்பிள் கிடைக்கும். பல மாதங்களாக விலை அதிகரித்து இருந்ததால், வாங்க தயக்கம் காட்டிய மக்கள், தற்போது கண்ணை கவரும் வகையிலும், எளிதில் வாங்கும் விலையிலும் வந்துள்ள ஆப்பிளை,

பொதுமக்கள் வாங்கி செல்கின்றனர். சிம்லாவில் இருந்து நேரடியாக, லாரிகள் மூலம், ஈரோட்டுக்கு வருகிறது. வரும் நாட்களில் வரத்து மேலும் பன்மடங்காக இருக்கும். அப்போது விலை மேலும் குறையக்கூடும். இவ்வாறு அவர் கூறினார். ஈரோடு மார்க்கெட் பகுதியில் உள்ள பழ கடைகளில், சிம்லா ஆப்பிள் பிரதான இடத்தை பிடித்துள்ளது. வாங்கும் விலைக்கு, ஆப்பிள் வந்துள்ளதால், மக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## <u>தரமான பருத்தி விதைகள் வாங்க அதிகாரி யோசனை</u>

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் தரமான பருத்தி விதைகளை சாகுபடிக்கு பயன்படுத்தி அதிக மகசூல் பெறலாமென, விதை பரிசோதனை நிலைய வேளாண் அலுவலர் ஜெகதீசன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து, அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவித்ததாவது:

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஊத்தங்கரை, போச்சம்பள்ளி மற்றும் மத்தூர் பகுதிகளில் விவசாயிகள் சாகுபடி மேற்கொள்ள இரக பருத்தி, வீரிய பருத்தி மற்றும் பி.டி., பருத்தி விதைகளை வாங்கும் போது விதை பரிசோதனை நிலையங்களில் இருந்து மட்டும் விதைகளை வாங்க வேண்டும். அவ்வாறு வாங்கப்படும் விதைகளுக்கு கட்டாயம் உரிய விற்பனை ரசீது கேட்டு பெற்றுக்கொள்ளவும். தமிழகத்தில் பி.டி., பருத்தி விதைகளை ஒதுக்கீடு செய்யாத நிறுவனங்களின் விதைகளை, பிற மாநிலங்களில் இருந்து வாங்க நேர்ந்தாலும், உரிய விதை விற்பனை ரசீதுகளை கட்டாயம் பெற்று கொள்ள வேண்டும். பருத்தி ரகத்தின் விவர அட்டையில் பயிர் செய்ய உகந்த மற்றும் உகந்த மாநிலம் போன்ற விவரங்களை சரிபார்த்து வாங்க வேண்டும். மேலும், தாங்கள் வாங்கும் பருத்தி விதை குவியலுக்குரிய முளைப்புத்திறன் பற்றி அறிக்கையினை கேட்டு சரிபார்க்க வேண்டும். இவ்வாறு விவசாயிகள் விதைகளின் தரத்தினை அறிந்து, தரமான விதைகளை பயன்படுத்தி அதிக மகசூல் பெற்றும் முன்னேற வேண்டும். இவ்வாறு அவர் செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார்.

## <u>ஒருங்கிணைந்த பண்ணைய மேலாண்மை பயிற்சி</u>

தேனி : தேனி காமாட்சிபுரம் சென்டெக்ட் வேளாண் அறிவியல் மையத்தின் ஒருங்கிணைந்த பண்ணைய முன்னிலை செயல் விளக்க திட்டத்தில், பளியன்குடி கிராமத்தில் இடுபொருள் வழங்கும் விழா நடந்தது. சென்டெக்ட் வேளாண் அறிவியல் மையத்தின் திட்ட ஒருங்கிணைப்பாளர் மாரிமுத்து தலைமை வகித்து

விளக்கம் அளித்து விதைகள் அளித்தார். பளியங்குடி ஊராட்சி ஆரம்ப பள்ளி தலைமை ஆசிரியர் கணேசன் முன்னிலை வகித்தார். தொழில் நுட்ப வல்லுநர் ஜோதிலிங்கம் கால்நடை வளர்ப்பு பற்றியும், விஜயமுருகன் பயிர் வளர்ப்பு பற்றியும், சந்திரசேகரன் பயிர் பாதுகாப்பு பற்றியும், சித்ரா குழந்தைகள் மற்றும் பெண்கள் சுகாதாரம் பற்றியும் விளக்கி கூறினார். விழாவில் இடுபொருள் கத்தரி, வெண்டை, பூசணி, பீன்ஸ், மிளகாய், சீனி அவரைக்காய், தட்டைப்பயிறு, தக்காளி, பாகற்காய் போன்ற விதைகளும், வீட்டு காய்கறி தோட்ட விதைகளும் 30 பளியன்குடி குடும்பங்களுக்கு வழங்கப்பட்டது.

<u>ஒட்டுரக தென்னை விவசாயிகளுக்கு அழைப்பு</u>

உச்சிப்புளி : உச்சிப்புளி அரசு தென்னை நாற்று பண்ணையில் நெட்டை, குட்டை ரகங்கள் உற்பத்தி செய்யப்பட்டு விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. இங்கு, நடவு செய்யப்பட்ட 2,500 குட்டை, நெட்டை ஒட்டுரக தென்னை நாற்றுகள் விற்பனைக்கு உள்ளன. ஒட்டு ரக தென்னங்கன்றுகள் இரண்டரை முதல் மூன்று ஆண்டுகளில் விளைச்சல் கிடைக்கும். மரம் ஒன்றுக்கு ஆண்டுக்கு 90 முதல் 100 காய்கள் கிடைக்கும்.தென்னந்தோப்புகளில் ஊடுபயிராக இக்கன்றுகளை பயிடலாம். பராமரிப்பற்ற தோப்புகளில் இத்தென்னங் கன்றுகளை நட்டு புதுப்பிக்கலாம். தென்னைக்கு தேவையான நீரை சொட்டுநீர் பாசனம் மூலம் அளித்தால் அதிக மகசூல் கிடைக்கும். "ஒட்டு ரக தென்னங்கன்றுகள், சொட்டுநீர் பாசனம் அமைக்க விரும்பும் விவசாயிகள், உச்சிப்புளி அரசு தென்னை நாற்று பண்ணையை அணுகலாம்' என வேளாண் உதவி இயக்குனர் சுப்புராஜ் கூறினார்.

<u>விவசாயிகளுக்கு பரிசு</u>

ராமநாதபுரம் : ராமநாதபுரத்தில், வேளாண் விரிவாக்க துணை இயக்கம் சார்பில், 2 2 விவசாயிகள், 4 விவசாயக்குழுக்களுக்கு 2.22 லட்ச ரூபாய் ஊக்கப்பரிசை கலெக்டர் நந்தகுமார் வழங்கினார். வேளாண் இணை இயக்குனர் கிருஷ்ணமூர்த்தி,

கலெக்டரின் நேர்முக உதவியாளர் கனகராஜ், துணை இயக்குனர் உதுமான் முகைதீன், உதவி இயக்குனர் ஷேக் அப்துல்லா பங்கேற்றனர்.

விவசாய முகாம்

திருவாடானை : திருவாடானை அருகே கோடனூர், ஓரிக்கோட்டை கிராமங்களில் ஊட்டமேற்றிய தொழு உரம் தயாரிப்பு, பயன்பாடு குறித்த தொழில்நுட்ப முகாம் நடந்தது. வேளாண் உதவி இயக்குனர் நாகராஜ். வட்டார உழவர் நண்பன் சுப்பிரமணியன், கூட்டுறவு வங்கி தலைவர் ஜெயப்பிரிராகசம், வேளாண் அலுவலர் சரவணன் பேசினர். தொழில்நுட்ப மேலாளர் சூர்யா, ராஜேஸ்வரி ஏற்பாடுகளை செய்தனர்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>வருண பகவான் கருணையால் புதுகை மாவட்டத்தில் அடைமழை ஏரி, குளம், கண்மாய்களில் நீர் நிரம்பத் துவங்கியது</u>**

புதுக்கோட்டை, : வருண பகவானில் கருணை யால் புதுக்கோட் டை, பொன்னமராவதி, கந்தர்வகோட்டை, திருமயம், கறம்பக்குடி உள்ளிட்ட புதுக்கோட்டை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் நேற்று அடை மழை பெய்தது. தொடர்ந்து 2 மணி நேரத்துக்கு மேலாகப் பெய்த மழையால் ஏரி, குளம், கண்மாய்களில் நீர் நிரம்பத் துவங்கியுள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். வறட்சியின் பிடியில் சிக்கித் தவித்த புதுக்கோட் டை மாவட்டத்தில் வருண பகவான் கருணையால் கடந்த சில நாட்களாக பரவலாக மழை பெய்து வருகிறது. காலை நேரத்தில் கோடையை போல் வெயில் கொளுத்தி வந்த போதும், பிற்பகலுக்குப் பின்னர் மாலை முதல் வானத்தில் கருமேகக் கூட்டம்

திரண்டு வந்து மழையை பொழிந்தன. இதேபோல், புதுக்கோட்டையில் நேற்றும் மாலை 5 மணிக்கு வானில் கருமேகங்கள் திரண்டு நின்றன. மேலும், மனதுக்கு இதமளிக்கும் குளு குளு தென்றல் காற்று வீசியது. இதைத் தொடர்ந்து பெய்யத் துவங்கியமழை அடைமழையாக நீடித்தது. இதனால், சாலைகளில் மழை நீர் வெள்ளம் போல் தாழ்வான பகுதிகளை நோக்கி கரை புரண்டு ஓடியது. குறிப்பாக, புதுக்கோட்டை புதிய பஸ் நிலையம், மின்சார வாரிய அலுவலகம், அரசு பொது மருத்துவமனை ரவுண் டனா உள்ளிட்ட பகுதிகளில் சாலைகளில் மழைநீர் வெள்ளம் போல் கரைபுரண்டு சாலைகளில் ஓடியது. தெருக்களில் ஓடிய மழை நீரில் சிறுவர்கள் உற்சாகமாக விளையாடினர். இதே போல், பொன்னமராவதி, கந்தர்வகோட்டை, திருமயம், கறம்பக்குடி உள்ளிட்ட புதுக்கோட்டை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் நேற்று அடை மழை பெய்தது. திருமயத்தில் மின்சாரம் தடைபட்டது.மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் பரவ லாக தொடர்ந்து பெய்து வரும் மழையின் காரண மாக ஏரி, குளம், கண்மாய்களில் நீர் நிரம்பத் துவங்கியுள்ளது. இதை பயன்படுத்தி வெள்ளாமை செய்ய லாம் என்பதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். அத்துடன் ஆடு, மாடுகள் உள்ளிட்ட கால்நடைகள் குடிப்பதற்கும், மக்கள் குளிப்பதற்கும் இந்த நீர் பயன்படும் என்பதால் மக்களும் மகிழ்ச்சியடைந்துள்ளனர். இதனிடையே, நகரில் உள்ள வரத்துவாரிகளையும், சாக்கடை செல்லும் வாய்க்கால்களையும் உடனடியாக அடைப்புகளை எடுத்து, தூர்வாரி மழை நீர் வீதிகளில் தேங்காமல் குளங்களுக்குச் செல்லும் வகையில் நகராட்சி நிர்வாகம் போர்க்கால நடவடிக்கை எடுக்க பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## <u>தலைஞாயிறு பகுதியில் விதை தெளிப்பு பணி தீவிரம்</u>

வேதாரண்யம், : தலைஞாயிறு பகுதியில் விதை தெளிப்பு பணிகள் துவங்கி உள்ளது. காவிரி டெல்டா மாவட்ட விவசாயிகள், சம்பா நெல் சாகுபடியை மேற்கொள்ள ஏதுவாக மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறக்கப்பட்டது. முதல்கட்டமாக விநாடிக்கு 9 ஆயிரம் கனஅடி வீதம் தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. இதனையடுத்து நாகை மாவட்டம் தலைஞாயிறு கடைமடை பாசனப்பகுதியில் சம்பா சாகுபடி பணிகள் மும்முரமாக தொடங்கியது. தலைஞாயிறு கோட்டகம் பெரியவாய்க்கால் பாசனப்பகுதியை சேர்ந்த 4850 ஏக்கர் பரப்பில் உள்ள பிரிஞ்சுமூலை, கோட்டகம் பகுதியில் உள்ள விவசாய நிலங்களில்

விவசாயிகள் விதை நெல் முகூர்த்தம் செய்து விதை தெளிப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.

## கண்டமனூர் பகுதியில் வெங்காய?விலை உயர்வால் விவசாயிகள் மகிழ்ச்சி

வருசநாடு, : கண்டமனூர் பகுதியில், வெங்காயம் விளைச்சல் குறைந்தாலும், விலை உயர்வால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். கண்டமனூர் பகுதியில், பெருமளவில், தேங்காய், இளவம்பஞ்சு, முருங்கை, வெங்காயம் ஆகியவை பயிரிடப்பட்டுள்ளது. கடந்த சில ஆண்டுகளாக இப்பகுதியில் மழை இல்லாததால் தேங்காய், இளவம்பஞ்சு, முருங்கை மற்றும் வெங்காயத்தின் விளைச்சல் குறைந்துள்ளது. அதன் காரணமாக இவைகளின் விலை அதிகரித்துள்ளது. தற்போது இப்பகுதியில் வெங்காயத்தின் விலை பல மடங்கு அதிகரித்துள்ளது. முதல் தரம் தற்போது ரூ.40 வரையிலும், இரண்டாம் தரம் ரூ.35 வரையிலும் சந்தைகளில் விற்பனை செய்யப்படுகிறது.. இந்த விலை உயர்வுக்கு கண்டமனூர் பகுதியில் மழை இல்லாமல் விளைச்சல் குறைந்ததே காரணம் என்கின்றனர். எனவே, கண்டமனூர் பகுதியில், விளைச்சல் குறைந்தாலும், விலை உயர்வால், வெங்காயம் பயிரிட்ட விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர்.

## தஞ்சையில் விவசாய தொழிலாளர் கட்சி ஆலோசனைக் கூட்டம்

தஞ்சை, : விழுப்புரத் தில் 19ம்தேதி நடைபெறும் விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சி மாநாட்டில் இளைஞர் அணியினர் சீருடையுடன் கலந்து கொள்ள வேண்டும் என்று தஞ்சை யில் நடந்த ஆலோசனை கூட்டத்தில் கேட்டுக்கொள்ளப்பட்டது. தஞ்சையில் தமிழ்நாடு விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சி சார்பில் மாவ ட்ட ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. மாவட்ட தலைவர் ஆரோக்கியசாமி தலைமை வகித்தார். அமைப்பு சாரா மாவட்ட செயலாளர் ஜெசிந்தா, மகளிர் அணி மாவட்ட தலைவர் ஆரோக்கியமேரி, மாவட்ட செயலாளர் செல்வி, கட்டுமான சங்க மாவட்ட செயலாளர் காந்தி ஆரோக்கியராஜ் ஆகியோர் முன் னிலை வகித்தனர். இளைஞர் அணி மாவட்ட தலைவர் குமார் வரவேற்றார். கூட்டத்தில் விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சி சார்பில் வரும் ஆகஸ்ட் 19ம் தேதி விழுப்புரத்தில் மாநில இளைஞரணி மாநாடு நடைபெற உள்ளது. மாநாட்டில் மாநில தலைவர் பொன்.குமார் தலைமை வகிக்கிறார். திமுக பொருளாளர் மு.க.ஸ்டா லின் கலந்து கொண்டு சிறப்புரையாற்ற உள்ளார். இதில் ஏராளமானோர் கலந்து கொள்கின்றனர். எனவே தஞ்சையிலிருந்து இளைஞர் அணியினர் சீருடையிலும்,

மற்றும் மாவட்ட, நகர, ஒன்றிய நிர்வாகிகள் மாநாட் டில் கலந்து கொள்ள வேண் டும். கட்டு மான தொழிலாளர்கள் நலவாரியம் மூலம் கேரளம், கர்நாடகம், மகாராஷ்டிரா, புதுசேரி ஆகிய மாநிலங்களில் விபத்தில் மரணம் அடைந்த தொழி லாளர் குடும்பங்களுக்கு ரூ.2 லட்சம் நிதி வழங்கப்படுகிறது. புதுச்சேரி மாநிலத்தில் தொழிலாளர்களுக்கு தீபாவளி போனஸ் வழங்கப்படுகிறது. ஆனால் தமிழகத்தில் விபத்து நிதி ரூ.1 லட்சம் தான் வழங்கப்படுகிறது. நலவாரியத்தில் பல நூறு கோடி ரூபாய் இருந்தும் ஆயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம், இறப்பு நிதி, விபத்து நிதி, திருமண நிதி ஆண்டு கணக்கில் வழங்கப்படாமல் உள்ளது. எனவே மற்ற மாநிலங்கள் போல் விபத்து நிதி ரூ.2 லட்சமும், தீபாவளி போனஸ் ரூ.5 ஆயிரமும் வழங்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டது. கூட்டத்தில் நிர்வாகிகள் சவுரிராஜ், முருகையன், சுரேஷ், ஆல்பர்ட்ராஜ், பேச்சியம்மாள், வேதவள்ளி ஆகியோர் கலந்து கொண் டனர். இளைஞர் அணி மாவட்ட செயலாளர் ஜோசப் பெஸ்கி நன்றி கூறினார்.

## பாபநாசத்தில் மழை

பாபநாசம், : பாபநாசத்தில் நேற்று முன் தினம் காலை வெயில் அடித்த நிலையில் மாலையில அரைமணி நேரம் மழை பெய்தது. இந்த மழையால் சாலையில் இருந்த பள்ளங்களில் மழை நீர் தேங்கியது. இதனால் வாகன ஓட்டிகள், பாதசாரிகள் பெரிதும் அவதிக்குள்ளாயினர். மழையை எதிர்பார்க்காததால் பல் வேறு வேலைகளுக்கு வந்த பெரும்பாலானவர்கள் மழையில் நனைந்து கொண்டே செல்ல வேண்டியிருந்தது. வாகனங்கள் வாரி அடித்த மழை நீரிலும் மக்கள் நனைந்தனர். இருப்பினும் வெயிலால் ஏற்பட்ட புழுக்கம் குறைந்து இதமான சூழ்நிலை நிலவியதால் பொதுமக்கள் மழையால் மகிழ்ச்சியடைந்தனர்.

## தென்னைக்கு சொட்டு நீர்பாசனம்

ராமநாதபுரம், : ராமநாதபுரம் மாவட்டம் மண்டபம் வட்டாரத்தில் 3 ஆயிரத்து 600 ஹெக்டேர் பரப்பில் தென்னை சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. இப்பகுதியில் தென்னைக்கு நீர்பாசனம் பதிக்கப்பட்ட குழாய்கள் மூலம் தண்ணீர் பாய்ச்ச படுகிறது. இதனால் அதிகப்படியான நீர் வீணாகிறது. தென்னை மரம் வரிசைக்கு இடையில் களைகள் உருவாகிறது. பயிருக்கு தேவையான அளவு நீரை வேருக்கு பக்கத்தில் சொட்டு சொட்டாக சொட்டு நீர்பாசன கருவிகள் மூலம் அளித்தால் அதிக மகசூல் தென்னையில் கிடைக்கும். பாசன நீர் அதிகம் வீணாவது

தடுக்கப்படுவதுடன், களைகள் கட்டுப்படுத்த படுகிறது. இதன் மூலம் மரம் நன்கு வளர்ந்து அதிக மகசூல் கிடைக்கிறது. எனவே தற்போது பதிக்கப்பட்ட குழாயிலிருந்து பக்க குழாய்களை இணைத்து சொட்டு நீர் பாசன கருவிகள் மூலம் தென்னைக்கு நீர்பாசனம் அளிக்க மாவட்ட நிர்வாகம் மூலம் மண்டபம் வட்டாரத்திற்கு 200 ஹெக்டேர் இலக்கு நிர்ணயிக்க பட்டுள்ளது. எனவே விருப்பமுள்ள விவசாயிகள் உச்சிப்புளி வட்டார வேளாண் விரிவாக்க மையத்தை அணுகி விண்ணப்பிக்கலாம் என உச்சிப்புளி வேளாண்மை உதவி இயக்குநர் சுப்புராஜ் தெரிவித்துள்ளார்.

## <u>புதுவை உளவாய்க்கால் பகுதியில் போயர் கலப்பின ஆடு வளர்ப்பில் ஆர்வம் காட்டி வரும் விவசாயிகள்</u>

வில்லியனூர், : புதுவை விவசாயிகள் பயன்பெறும் வகையில் ஆஸ்திரேலியா நாட்டின் போயர் இன ஆடுகளை நமது நாட்டு ஆடுகளுடன் சேர்த்து கலப்பின ஆடுகளை உருவாக்க அரசு முடிவெடுத்தது. இதன்படி புதுவை கால்நடைத்துறை மூலமாக ஆடுகள் இனவிருத்தி செய்வதற்கு ஊசுடு தொகுதியை சேர்ந்த உளவாய்க்கால் பகுதி சேர்ந்த விவசாயிகள் முன்வந்தனர். அவர்களிடம் உள்ள நாட்டு ஆடுகளுக்கு போயர் இனத்தின் ஆடுகளின் விந்து அணுக்கள் செலுத்தப்பட்டு கலப்பினங்கள் உருவாக்கப்பட்டன. தற்போது இந்த கலப்பின ஆடுகள் குட்டிகளை ஈன்றுள்ளதால் கால்நடை மருத்துவர்கள், விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர். போயர் இன ஆடுகள் சுமார் 160 கிலோ அளவிற்கு வளரக்கூடியது. இதில் கலப்பினங்களாக உருவாக்கப்பட்ட ஆடுகள் சுமார் 60 கிலோ வரை வளரக்கூடியது. தற்போது வில்லியனூர் அடுத்த உளவாய்க்கால் பகுதியை சேர்ந்த விவசாயி அதியமான்(45) வளர்த்த 28 கலப்பின ஆடுகளில் 3 ஆடுகள் குட்டி ஈன்றுள்ளன. இவற்றை கார்த்திகேயன் எம்எல்ஏ, வில்லியனூர் கால்நடை மருத்துவர் குமாரவேல் ஆகியோர் பார்வையிட்டனர். இதுகுறித்து டாக்டர் குமாரவேல் கூறியதாவது: கலப்பினமாக உருவாக்கப்பட்ட இந்த ஆடுகள் முதல் முறையாக குட்டி ஈன்றுள்ளன. குட்டிகள் அனைத்தும் நலமுடன் உள்ளது. இந்த குட்டிகள் நாள் ஒன்றுக்கு 300 கிராம் வரை வளரக்கூடியது. இதற்கு மற்ற ஆடுகள் போல் புல் மற்றும் தவிடு, புண்ணாக்கு ஆகியவற்றை வழங்கலாம். இது 2 ஆண்டுகளில் 60 கிலோ எடை கொண்டதாக வளர்ந்து விடும். மேலும் குட்டிகளை ஈன்ற 6 மாதத்தில் அடுத்த இனவிருத்திக்கு

தயாராகி விடும். இவற்றை விவசாயிகள் வளர்ப்பதால் கூடுதல் லாபத்தை அடைய முடியும், என்றார்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>கூடலூர் அருகே சூரியகாந்தி சாகுபடி</u>**



தேனி மாவட்டம் கூடலூர் மேற்குத்தொடர்ச்சி மலை அடிவாரத்தை ஒட்டிய பகுதி களில் மானாவாரி நிலங்கள் ஏராளமாக உள்ளன. இந்த நிலங்களில் நிலக்கடலை, எள், சூரியகாந்தி உள்ளிட்ட எண்ணை வித்து பயிர்கள் சாகுபடி செய்யப்படுவது வழக்கம். இந்த ஆண்டு நிலக் கடலை, எள் ஆகியவற்றை காட்டிலும் சூரியகாந்தி சாகு படியில் விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். தற்போது மலையடி வாரத்தை ஒட்டிய கல் உடைச் சான் பாறை உள்ளிட்ட பகுதி களில் சூரியகாந்தி பயிரிடப் பட்டுள் ளது. கடந்த மே மாதம் விதைக் கப்பட்ட சூரியகாந்தி தற்போது நன்றாக விளைச்சல் அடைந்துள்ளது. அறு வடைக்கு தயாரான நிலையில் இருப்பதால் மொத்த வியா பாரிகள், உள்ளூர் வியாபாரி களிடம்

தொடர்பு கொண்டு விசாரித்து வருகின்றனர். விரைவில் அறுவடை பணிகள் தொடங்க உள்ளதாக விவ சாயிகள் தெரிவித்தனர்.

## பருத்தி பறிக்கும் கருவி குறித்து மாணவிகள் செயல் விளக்கம்



தேனி மாவட்டம் தேவதானப்பட்டி அருகே உள்ள குள்ளப்புரம் வேளாண்மை தொழில்நுட்ப கல்லூரி மாணவிகள் காயத்ரி, ஹரிதா, நந்தினி, சண்முகப்பிரியா, விஜயலெட்சுமி உள்பட 9 மாணவிகள் கிராம தங்கல் திட்டத்தின் கீழ் தங்கி இருந்து விவசாய சாகுபடி தொழில் நுட்பங்கள் குறித்து விவசாயி களுக்கு பயிற்சி அளித்து வருகின்றனர். அதன்படி வெங்கடாசலபுரத்தை சேர்ந்த விவசாயி ஒருவரின் நிலத்தில் பருத்தியை அறுவடை செய்யும் கருவியை கொண்டு செயல்விளக்கம் அளித்தனர். வேலை ஆட்கள் பற்றாக்குறை உள்ள நிலையில் இந்த கருவியை பயன்படுத்துவதன் மூலம் விவசாயிகள் எளிய முறையில் பருத்தியை அறு வடை செய்யலாம் என்பது குறித்து மாணவிகள் விவசாயி களுக்கு விளக்கம் அளித்தனர்.

**திருந்திய நெல் சாகுபடியில் களை அமுக்கி பயன்படுத்துவது எப்படி வேளாண் கல்லூரி மாணவிகள் செயல்விளக்கம்**



**நெல்லை, திருந்திய நெல் சாகுபடியில் களை அமுக்கி பயன்படுத்துவது குறித்து கிள்ளிகுளம் வேளாண்மை கல்லூரி மாணவிகள் செயல்விளக்கம் செய்து காண்பித்தனர்.**

கல்லூரிமாணவிகள்

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகத்தின் கீழ் இயங்கும் வேளாண்மைக் கல்லுீரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், கிள்ளிகுளம் கல்லூரியைச் சேர்ந்த மாணவிகள் இந்துமதி, மாரிச்செல்வி, பிரீத்தி, பிரியா, சங்கவி, வைதேகி ஆகியோர் பாபநாசம் கிராமத்தில் கருப்பசாமி அவர்களின் உதவியோடு களைஅமுக்கி செய்முறை விளக்கம் செய்து காட்டினர். திருந்திய நெல் சாகுபடியில் இடைவெளியானது சமமாக இருப்பதால் களைப்பொறிகளை உபயோகிப்பது எளிதாக இருக்கும். எண்ணற்ற களைப்பொறிகள் உள்ளன. அதில் ஒன்று தான் களை அமுக்கி. இக்களை அமுக்கிகள் நெல் வயலில் உள்ள பசுந்தாள் களைகளை மண்ணில் அமுக்குகிறது நாற்றங்காலை வயலுக்கு மாற்றிய 10-12 நாட்களுக்கு ஒரு முறை. இக்களை அமுக்கிகளை பயன்படுத்த வேண்டும்.

முக்கியத்துவம்

களைகள் சிறியதாக இருந்தாலும் இக்களை அமுக்கிகளை பயன்படுத்த வேண்டும்.

களை எடுப்பதில் கால தாமதம் ஏற்பட்டால் களைகளை மண்ணிற்குள் அமுக்கப்படுவதில் பிரச்சனை ஏற்படும். களைகள் எடுப்பதற்கு ஒரு நாட்களுக்கு முன்பு வயலில் நீர் பாய்ச்ச வேண்டும். நீரின் அளவு குறைந்தது ½ அங்குலத்திற்காவது இருக்க வேண்டும். அடுத்த நாள் களை அமுக்கியினை செங்குத்தாகவும் கிடைமட்டமாகவும் இரண்டு வரிசைகளுக்கு இடைவெளியில் முன்னும் பின்னும் நகர்த்த வேண்டும். இதன் மூலம் களைகள் மண்ணில் அமுக்கப்படுகின்றன. சிறந்த முறையில் களைகளை மேலாண்மை செய்வதினால் மகசூலானது 50 க்கும் மேல் அதிகரிக்கிறது. களை அமுக்கியினால் வயலில் வேலையாட்களின் அளவு குறைக்கப்படுகிறது. களை அமுக்கியினால் நன்செய் நெல்லில் களைகளின் அளவை குறைக்கலாம்.

<u>பயன்கள்</u>

மண்ணில் காற்றோட்ட அளவை அதிகரிக்கிறது. தாவரம் மற்றும் வேர்த் தொகுதியின் வளர்ச்சியினை ஊக்குவிக்கிறது. பசுந்தாள் தாள் களைகள் மண்ணில் அமுக்குக்கப்படுவதால் நெற்பயிருக்கு ஊட்டச்சத்துக்கள் கொடுக்கப்படுகிறது. தூர் எண்ணிக்கையினை அதிகமாக்குகின்றன. கதிரின் அளவை பெரிதாக்குகின்றன. கதிர் மற்றும் நெல்மணிகளின் எண்ணிக்கையை அதிகமாக்குகின்றன. நெல் மணிகளின் மகசூலையும் அதிகமாக்குகின்றன.

தி இந்து
தமிழால் இணைவோம்

## இன்றைய வேளாண் செய்திகள்

### <u>கர்நாடக அணைகளில் இருந்து திறக்கப்படும் நீர் குறைப்பு: மேட்டூர் அணை நிரம்புவதில் தாமதம்</u>



கர்நாடகத்தில் தென்மேற்கு பருவமழை ஓய்ந்ததன் காரணமாக கிருஷ்ணராஜசாகர், கபினி, ஹேமாவதி ஆகிய அணைகளில் இருந்து தமிழகத்திற்கு திறந்து விடப்படும் உபரி நீர் வெகுவாக குறைக்கப்பட்டுள்ளது. இதனால் மேட்டூர் அணை நிரம்புவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. கர்நாடக மாநிலத்தில் குடகு, தலைக்காவிரி, மடிகேரி, ஷிமோகா, சிக்மகளூர், மங்களூர் உள்ளிட்ட பல பகுதிகளில் கடந்த ஒரு மாதமாக தென்மேற்கு பருவமழை கொட்டித்தீர்த்தது. அரபிக் கடலில் உருவாகி இருந்த குறைந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் காரணமாக கடலோர கர்நாடகத்திலும், கேரளாவின் வயநாடு பகுதிகளிலும் கனமழை பெய்தது. இதனால் கர்நாடகத்தில் உள்ள அனைத்து அணைகளும் நிரம்பி வழிந்தன.

**மேட்டூர் நீர் மட்டம் அதிகரிப்பு**

எனவே காவிரி ஆற்றில் குறுக்கே அமைந்துள்ள கிருஷ்ண ராஜசாகர், கபினி, ஹேமாவதி, ஹாரங்கி ஆகிய அணைகளுக்கு வந்து கொண்டிருந்த நீர் தமிழகத்திற்கு திறக்கப்பட்டது. அதிகபட்சமாக கடந்த வாரம் காவிரியில் வினாடிக்கு 90 ஆயிரம் கன அடி நீர் வரை திறக்கப் பட்டது. இதனால் மேட்டூர் அணை யின் நீர்மட்டம் மிக வேகமாக அதிகரித்தது.

**நீர்வெளியேற்றம் குறைப்பு**

இந்நிலையில் கடந்த 3 தினங்களாக கர்நாடக மாநிலத்தில் குறிப்பாக காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்து வந்த தென்மேற்கு பருவ மழை ஓய்ந்தது. இதனால் கிருஷ்ண ராஜசாகர், கபினி உள்ளிட்ட அணைகளுக்கு வந்து கொண்டி ருந்த நீரின் அளவு கணிசமாக குறைந்தது. எனவே அந்த அணை களில் இருந்து வெளியேறும் உபரி நீரின் அளவை கர்நாடக நீர்ப் பாசனத்துறை வெகுவாக குறைத் துள்ளது. ஹாரங்கி, ஹேமாவதி அணைகளில் இருந்து வெளியே றும் உபரி நீரின் அளவை பாதியாக குறைத்து, வினாடிக்கு 2,500 கன அடி நீர் வெளியேற்றப்படுகிறது.

விவசாயிகளிடம் அமோக வரவேற்பு

நிலமும் வளமும் பகுதியில் வெளியாகி வரும் கட்டுரைகள் விவசாயிகள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளன. குறிப்பாக கடந்த ஆகஸ்ட் 6-ம் தேதி வெண்பன்றி வளர்ப்பு தொடர்பான கட்டுரை வெளியானது. அந்தக் கட்டுரையைப் படித்த விவசாயிகளில் 1000-க்கும் மேற்பட்டோர் தன்னை தொடர்பு கொண்டு விவரங்களைக் கேட்டறிந்ததாக திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரத்தில்

வெண்பன்றி பண்ணை வைத்திருக்கும் வி.ராஜேந்திரன் தெரிவிக்கிறார். மேலும், 50-க்கும் மேற்பட்ட விவசாயிகள் தனது பண்ணைக்கு நேரில் வந்து பார்த்து, விவரங்களை கேட்டுச் சென்றதாகவும், 'தி இந்து' நாளிதழ் தந்த விவரங்களின் பயனால் பலர் வெண்பன்றி பண்ணை அமைப்பதற்கான பூர்வாங்கப் பணிகளைத் தொடங்கி விட்டதாகவும் ராஜேந்திரன் கூறுகிறார். அந்தக் கட்டுரையைப் படித்த பிறகு தன்னிடம் நூற்றுக்கும் மேற்பட்டோர் தொடர்பு கொண்டு பேசியதாக சென்னை மாதவரத்தில் உள்ள தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக ஆராய்ச்சிப் பண்ணையின்பேராசிரியர் மற்றும் தலைவர் பா.டென்சிங் ஞானராஜ் கூறுகிறார். இதேபோல் அதே நாளில், வேர் உட்பூசணம் குறித்த கட்டுரை வெளியானது. இக்கட்டுரையினை படித்துவிட்டு 250-க்கும் மேற்பட்ட விவசாயிகள் தொலைபேசியின் வாயிலாக தன்னை தொடர்பு கொண்டு வேர் உட்பூசணம் குறித்த தங்களது சந்தேகங்களை கேட்டறிந்ததுடன் ,அவற்றை பயிர்களில் பயன்படுத்தும் விதம் மற்றும் கிடைக்கும் இடங்கள் குறித்த தகவல்களை தெரிந்து கொண்டதாக மைராடா வேளாண் அறிவியல் நிலைய உழவியல் துறைதொழில்நுட்ப வல்லுநர் ச.சரவணக்குமார் தெரிவிக்கிறார்.